கீழப்பழவூர் கிராமத்தில் மின்சாரம்

*** 441 கேள்வி—திரு. எஸ். ராமசாமி :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

திருச்சி மாவட்டம் கீழப்பழவூர் அரிசன தெருவிற்கு மின்விளக்கு போடுவதில் தாமதம் ஏற்படுவதற்குக் காரணமென்ன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தேசிய நெருக்கடி காரணமாக, கீழப்பழவூர் பஞ்சாயத்தில் ஹரிஜனத் தெருவுக்கு மின் விளக்கு விஸ்தரிக்கும் வேலை மற்ற வேலைகளுடன் தென் சென்னை மின்சார சப்ளை கார்ப்பொரேஷன் லிமிடெட் ஸ்தாபனத்தால் நிறுத்தி வைக்கப்பட்டது. 1963-64-ம் ஆண்டுக்குரிய தன் வேலைத் திட்டத்தில் இவ்வேலையைச் சேர்த்துக் கொள்வது குறித்து இக் கார்ப்பொரேஷன் இப்போது ஆலோசித்து வருகிறது.

மின்விசை போர்டு

*** 442 கேள்வி— திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை மின்சார போர்டிற்கு ஆண்டுதோறும் தேவைப்படும் L.T. Transformers எத்தனை ?

(இ) 1963-ல் Transformers இல்லாமல் வேலை தாமதப்படுத்தப்பட்டுள்ளது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

(உ) அரசாங்கம் மின்சார போர்டின் நிர்வாகத்தில் ஒரு Transformer Factory ஆரம்பிக்க உத்தேசமுண்டா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) சுமார் 1,500.

(இ) இல்லை.

(உ) இல்லை.

(a) About 1,500.

(b) No.

(c) No.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : ஸார், இந்த மின்சார விஸ்தரிப்பு செய்வதில் கிராமங்களுக்கு மின்சார இணைப்பு கொடுக்கப்படாமல் டிரான்ஸ்பார்மர் இல்லாமல் காலதாமதம் ஆவது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? குறிப்பாக என்னுடைய கிராமத்தில் மட்டும் 17 இடங்களில், டிரான்ஸ்பார்மர் இல்லாமல் வேலை நடக்காமல் இருக்கிறது . ஆகவே நமது மின்சார போர்டுக்கு வேண்டிய டிரான்ஸ்பார்மர்களை உற்பத்தி செய்வதற்கு வேண்டிய ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்த அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : காலதாமதம் ஆவதாக நான் ஏற்றுக்கொள்ள முடியாது. காரணம், கடந்த ஆறு மாதங்களுக்குள்ளாக 993 கிராமங்களுக்கு மின் விளக்கு வசதி

22nd November 1963]

கொடுக்கப்பட்டிருக்கிறது. காலதாமதம் ஆவதாக இருந்தால் கிட்டத்தட்ட 1,000 கிராமங்களுக்கு ஆறு மாதத்திற்குள்ளாக இந்த வசதி செய்து இருக்க முடியாது. கனம் அங்கத்தினர் சொல்கிற இடத்தில் காலதாமதம் ஆகிறது என்றால், ப்ரயாரிடி பிரகாரம் தான் அந்த வேலைகளை செய்து வருகிறோம்.

திரு. ஜே. மாதா கவுடர்: டிரான்ஸ்பார்மர் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு வருகிறதா? அல்லது நம் நாட்டிலேயே உற்பத்தி செய்யப்படுகிறதா? வெளிநாடுகளில் இருந்து தான் இறக்குமதி செய்யப்படுகிறது என்றால் நம் நாட்டிலேயே உற்பத்தி செய்ய வழிவகைகள் மேற்கொள்ளப்படுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இப்போது நான் கைந்து டிரான்ஸ்பார்மர் பாக்டரிகள் நம் ராஜ்யத்திலேயே இருக்கின்றன.

* 443 Q.—Sri R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there is any proposal to constitute Local Advisory Committees for the Electricity Board for each district; and

(b) if so, the details thereof?

The Hon. Sri R. VENKATARAMAN: (a) No.

(b) Does not arise.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: பொதுமக்கள் தங்கள் குறைகளை எடுத்துச் சொல்லிக்கொள்வதற்கு மாவட்ட ரீதியில் மின்சாரக் கமிட்டி என்று ஏற்படுத்தினால் பொதுமக்களுக்கு மிகவும் சௌகர்யமாக இருக்கும் என்று தோன்றுவதனால் அரசாங்கம் அதை அமைக்க ஆலோசிக்குமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: மின்சார பட்ஜெட் விவாதத்தின் போது இதே கேள்விக்கு நான் பதில் சொல்லியிருக்கிறேன். அதே பதிலைத்தான் இப்போதும் சொல்ல விரும்புகிறேன். இப்போது ஜில்லாக்களில் டெவலெப்மெண்டு கவுன்சில் இருக்கிறது. மின்சாரம் சம்பந்தமாகவும் அதில் பிரச்சனைகளை விவாதிக்க இடம் இருக்கிறது. ஆகவே தனியாகக் குழு தேவையில்லை.

* 444 Q.—Sri R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Industries be pleased to state whether any monetary help is given to the families of the employees of the Electricity Department who meet with accidents and die during the discharge of their duties?

The Hon. Sri R. VENKATARAMAN: Yes.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: 1962 ஆம் ஆண்டில் எத்தனை குடும்பங்களுக்கு இந்தமாதிரி பண உதவி செய்யப்பட்டுள்ளது என்று அறிய விரும்புகிறேன்.